# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.225/2024 | Date | : 16.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : லாவண்யா | Calling | : |
| Father / Husband Name | : கோபி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.02.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், காளிகவுண்டம்பாளையம் கிராமம், கூத்தாடிபாளையத்தில் வசித்து எடப்பாடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14-02-2022 ம் தேதி, இரவு சுமார் 08.00 மணியளவில் எனது அம்மா பழனியம்மாள், என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது அண்ணன் விக்னேஷ், சங்ககிரியில் இருந்து வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் சங்ககிரி டோல்கேட்டிற்கு முன்பாக வந்துகொண்டிருந்தபோது, டிராக்டர் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டிருப்பதாகவும், அவரை சேலம் விம்ஸ் மருத்துமவனையில் சிகிச்சையில் சேர்த்திருப்பதாக தகவல் கிடைத்தது.

2) தகவல் அறிந்து நான் அங்கு சென்று பார்த்தபோது, அவருக்கு கன்னத்திலும், காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர், இது சம்பந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் ஒன்று கடந்த 18-03-2022 ம் தேதி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :-

விபத்து குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

Sd/-S.Sathiya,

Sd/-Lavanya

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.225/2024 | Date | : 16.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : விக்னேஷ் | Calling | : |
| Father Name | : கோவிந்தராஜ் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை :**</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், இரும்பாலையில் வசித்து சங்ககிரியில் லாரி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 14-02-2022 ம் தேதி, இரவு சுமார் 06.00 மணியளவில் நான் என்னுடைய வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக எனது Pulsar இருசக்கர வாகனத்தில் சங்ககிரி டோல்கேட்டிற்கு முன்பாக 99 காபி பார் கடை அருகே சாலையின் இடதுபுறமாக இருசக்கர வாகனங்கள் செல்லும் வெள்ளைக்கோட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு எதிரே டிராக்டர் ஒன்று வந்துகொண்டிருந்தது. அந்த டிராக்டர் நேராக வந்து என்மீது மோதிவிட்டது.

2) மோதியவுடன் நான் சுமார் 05 அடி தூரம் தள்ளி விழுந்துவிட்டேன். விபத்தில் எனக்கு தாடையிலும், காலிலும் அடிப்பட்டது. பின்னர், ஆம்புலன்ஸ் மூலம் சேலம் விம்ஸ் மருத்துமவனையில் சிகிச்சையில் சேர்த்தனர். பின்னர்,

மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்ந்தேன். ஆஜர் எதிரி தான் மேற்படி டிராக்டர் வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

எதிரி சரியான திசையில், சரியான வேகத்தில் தான் டிராக்டரை ஓட்டி வந்தார் என்றும், நான் தான் எனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Vignesh

Judicial Magistrate No.1,

Sankari.